# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1949 - 2016 ජනවාරි මස 08 වැනි සිකුරාදා - 2016.01.08

*1949 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | – |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 6 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, சனவரி மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, சனவரி மாதம் 14 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பு மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (குடியியல் நியாயாதிக்க) ஒடுக்கப்படுவதற்கான அறிவித்தல்

வழக்கு இல. : HC/ குடியியல்/54/ 2015/சி. ஓ
தன்மை : கணக்கு முடித்து முடி விடுவது
நடவடிக்கை: கம்பனிகள் சட்டம்
பெறுமதி : US டொலர் 9, 750 (ரூபா 1, 271, 010)

இல. 24 பீ, பெயார் மவுன்ட் டெசிடன்சிஸ், புத்கமுவ வீதி, ராஜகிரிய என்னும் முகவரியில் அமைந்துள்ள ஸ்டோர் குருப் லங்கா ( பிரைவட்) லிமிட்டட் ;

மற்றும்

2007 ஆம் ஆண்டு கம்பனிகள் சட்டத்தின் XII பகுதியில் நீதிமன்றம் மூலம் கணக்கு வழக்குகளை முடிவுக்கு கொண்டு வந்து முடி விடுவதற்கான வேண்டுகோள் தொடர்பான விடயம்;

ட்ரான்ஸ் ஸ்க்ரின் ஒடோமேடட் ( பிரைவேட்) லிமிட்டட். 54/1ஏ, வெவ இஹல வீதி, ஜம்புரலிய, மடபாத.

மனுதாரர்

மேற்படி பெயரிடப்பட்ட நிறுவனம் வர்த்தக மேல் நீதிமன்றம் முன் கணக்குகளை முடித்து முடி விடுவதற்கான மனு ஒன்றை மடபாத்த, ஜம்புரலிய, வெவ இஹல வீதி, இல. 54/1ஏ என்ற இடத்தில் ட்ரான்ஸ் ஸ்க்ரின் ஓடோமேடட் ( பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தால் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி வர்த்தக மேல் நீதிமன்றம் முன் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், குறித்த மனு 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி நீதிமன்றம் முன் விசாரணைக்கு எடுக்க கட்டளை இடப்பட்டதாகவும், அம் மனு தொடர்பான கட்டளை ஒன்றை வழங்குவதற்கு சாதகமாக அல்லது எதிராக கூற்றுக்களை எடுத்துரைக்க எதிர்பார்க்கும் குறித்த நிறுவனத்தின் கடன் வழங்குநர் அல்லது வாடிக்கையாளர்கள் இருப்பின் அது குறித்து பிரத்தியேகமாக அல்லது தங்களது சட்ட ஆலோசகர் அல்லது சட்டத்தரணி மூலமாக குறித்த விசாரணை நடத்தும் போது ஆஜராக முடியும் என்றும், குறித்த மனுவின் பிரதியொன்றை பெற்றுக்கொள்வதற்காக உரிய கட்டணங்களை பெற்றுக்கொண்ட பின்னர் அதன் பிரதி தேவைப்படும் குறித்த நிறுவனத்தின் கடன் வழங்குநர் அல்லது வாடிக்கையாளர்களுக்கு கீழ் கையொப்பமிடும் நபரால் வழங்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது.

கையொப்பம் :
ஆர். ஏ. லங்கா ஆர். தர்மசிறி,
இல.53, கொங்கிதொட,
வத்தளை.

**குறிப்பு**.- குறித்த மனுவை விசாரணையின் போது தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் எவரெனும் இருப்பின் அவ்வாறு செய்வதற்கு தான் திட்டமிட்டு இருப்பதாக எழுத்து மூல அறிவித்தல் ஒன்று மேற்படி பெயரிடப்பட்ட ஆர். ஏ. லங்கா, ஆர். தர்மசிறியிடம் கொண்டு வந்து கையளிக்க வேண்டும், அல்லது தபாலில் அனுப்ப வேண்டும். குறித்த அறிவித்தலின் குறித்த நபரின் பெயர் மற்றும் விலாசம், அல்லது வர்த்தக நிறுவனம் என்றால் அந் நிறுவனத்தின் பெயர், முகவரி போன்றவற்றை குறித்து குறித்த நபரால் அல்லது அவ் வர்த்தக நிறுவனத்தால் அல்லது அவரின் அல்லது அவர்களது சட்டத்தரணிகள் இருப்பின் அவரால் கையொப்பமிட்டு மேற்படி பெயரிடப்பட்ட நபர் 2016. 01. 06 ஆந் திகதி மாலை 6.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொண்டு வந்து கையளிக்கப்பட வேண்டும் அல்லது அதே வகையில் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

ஆர். ஏ. லங்கா ஆர். தர்மசிறி,
இல.53, கொங்கிதொட,
வத்தளை.

1-302

## கொழும்பு மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (குடியியல் நியாயாதிக்க) ஒடுக்கப்படுவதற்கான அறிவித்தல்

வழக்கு இல. : மேல் நீதிமன்ற (குடியியல்56/ 2015/CO)
தன்மை : ஒடுக்குதல்

அதன் பதிவு செய்யப்பட்ட முகவரி இல. 3 B. BEPZ, பியகம, மல்வான, இலங்கையில் அமைந்துள்ள குலோபல் பெக்கேஜ் ( பிரைவட்) லிமிட்டட் சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பானது,

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் கீழ் மற்றும் அதன் பிரகாரம் நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்கப் படுவதற்கான விண்ணப்பம் பற்றி விடயம் தொடர்பானது;

ரஞ்சன் த சில்வா,
இல. 27 ஏ, கல்யாணி மாவத்தை,
வத்தளை.

மனுதாரர்

குடியியல் நீதிமன்ற அதிகாரத்தை செயற்படுத்தி கொழும்பில் நடாத்தப்படுகின்ற மேல் மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் மேலே குறிப்பிடப்பட்ட கம்பனியை ஒடுக்குவதற்கான மனுவொன்று வத்தளை, கல்யாணி மாவத்தை, இல. 27 ஏ என்னும் இடத்தைச் சேர்ந்த ரஞ்சன் த சில்வா என்பவரால் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அம்மனு 2016, பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி அந் நீதிமன்றத்தின் முன் விசாரணைக்காக நியமிக்கப் பட்டுள்ளதென்றும், அம் மனு தொடர்பான கட்டளையொன்றைச் செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதை எதிர்ப்பதற்கு விரும்பும் அக் கம்பனியின் எந்தவொரு கடன்தருநருக்கும் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு அந் நோக்கத்திற்காக அவ்விசாரணை செய்யப் படுகின்ற போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியுமென்றும், மனுவில் பிரதியொன்று தேவைப்படும் கம்பனியின் எந்தவொரு கடன்தருநருக்கு கட்டணங்களைச் செலுத துவதன் மீது, கீழே கையொப்பமிடுபவரால் அது வழங்கப்படுமென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கையொப்பம் :
எப். ஜே மற்றும் ஜீ. த சேரம்,
சட்டத்தரணிகள்,
இல. 216, த சேரம் பிளேஸ்,
கொழும்பு.

**குறிப்பு**.- அம் மனு சம்பந்தப்பட்ட விசாரணயின் போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்குள்ள தனது எண்ணத்தை மேலே குறிப்பிடப்பட்டுள்ள எவ். ஜே. மற்றும் ஜீ. த சேரம் சட்டத்தரணிகளுக்கு எழுத்து மூலம் அறிவித்துக் கையளிக்கப்படுதல் வேண்டும் , அல்லது அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அறிவித்தலைச் செய்கின்ற ஆளின் பெயர் மற்றும் முகவரியை அறிவித்தலில் வெளியிடப்பட வேண்டு மென்பதுடன், ஆள் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களினது ( சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின் ) சட்டத்தரணி கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2016 பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னர் கையளிக்கப்படுதல் வேண்டும், அல்லது அஞ்சல் மூலம் அனுப்புவதாயின் அவர்களுக்கு ( மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிகளுக்கு) உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும்.

1-422

## ரஞ்சன் ராமநாயக்க மன்றம் கூட்டிணைக்கப்படல் தொடர்பான சட்டம்

கௌரவ எட்வட் குணசெகர ஆகிய என்னால் அறிவிக்கப்படுவதாவது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 இன் கீழ் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவுள்ள ரஞ்சன் ராமநாயக்க மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமொன்றை பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன்:-

பின்வரும் பொது குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தை கூட்டிணைப்பதே இச் சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(1) தேகாரோக்கியம் நிறைந்த, அமைதியானதும் சௌகரியமான முறையிலும் வாழ்நாளைக் கழிப்பதற்காக நலன்புரி வசதிகளை அளிப்பதன் மூலம் அனைத்து வசதியற்றவர்களுக்கும் உதவி ஒத்தாசைகளை வழங்குதல்;

(2) குறைந்த வருமானம் பெறும் மற்றும் வேலையற்றோர்களுக்கு உதவி வழங்க மற்றும் சந்தர்ப்பமொன்றை வழங்குவதன் மூலம் குறித்த நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல்;

(3) வறிய குடும்பங்களுக்குத் தேவைப்படும் காணி , வீடு மற்றும் பாடசாலைக் கல்வி தேவைகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் குறித்த நிறுவனங்களுக்கு ஒத்துழைப்பு நல்குதல்

பிறவும்.

கௌரவ எட்வர்ட் குணசேகர,
பாராளுமன்ற உறுப்பினர்,
கம்பஹா மாவட்டம்.

1-416

## ஜனகரலிய கலாச்சார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

சுனில் ஹதுன்னெத்தி ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''ஜனகரலிய கலாச்சார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ்செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்:-

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:-

(1) இயற்கையைப் புரிந்து இயற்கையை நேசிக்கக்கூடிய ஒரு சமூகத்தை உருவாக்குவதுடன் அவ்வாறான சமூகத்துடன் நல்லுறவைக் கட்டியெழுப்பி இணைந்து வாழ்வதை ஊக்குவித்தலும்;

(2) இலங்கையின் எப்பாகத்திலும் அல்லது வெளியிலும் நாடகம் மற்றும் தியேட்டர் தொடர்பாக பட்டறைகள், மாநாடுகள், கருத்தரங்குகள், குழு ஆய்வுகள், விரிவுரைகள், பொன்றவற்றை நடாத்துதல் மற்றும் அனுசரணை வழங்கலும் ;

(3) சங்கத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரச, தனியார் மற்றும் சமூக அமைப்புக்களுக்கு உதவுதலும்;

பிறவும்.

சுனில் ஹந்துன்னெத்தி,
பாராளுமன்ற உறுப்பினர்.

1-431